| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. எம். இராமசாமி,<br>இணை இயக்குநர்(மேல்நிலை)<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/<br>இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |

ந.க.எண்.122729/பி1 /2019 நாள். 08 .06.2020

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – இடப் பற்றாக்குறை காரணமாக சில தனித் தேர்வர்களுக்கான தேர்வு மையங்கள் மாற்றம் செய்யப்பட்டது – முதன்மை விடைத்தாட்களை மாற்றம் செய்யப்பட்ட தேர்வு மையங்களுக்கு அனுப்புதல் தொடர்பாக அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: இதே எண்ணிட்ட இவ்வலுவலகக் கடிதம், நாள்: 02.06.2020

-----

முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையினை ஏற்று, தேர்வு மையத்தில் ஒரு தேர்வறையில் 10 தேர்வர்கள் மட்டுமே சமூக இடைவெளியோடு அமர வைக்கப்பப்படவேண்டும் என்ற விதிமுறையின் காரணமாக, பழைய பாடத்திட்டத்தில் / புதிய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகளை எழுதும் சில தனித்தேர்வர்களுக்கான தேர்வு மையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன

அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட தனித்தேர்வர்களுக்கான புதிய தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்கள், தற்போது தங்கள் தேர்வு மையத்தில் தேர்வெழுதவுள்ள தனித்தேர்வர்களது முகப்புத் தாட்களுடன் கூடிய முதன்மை விடைத்தாள்களை உடனடியாக பழைய தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். அதன்பின், ஏற்கனவே முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்கப்பட்டுள்ள அனைத்து பாடங்களுக்கான முகப்புத் தாள்களிலும் அந்தந்த பாடத்திற்கான தேர்வு நடைபெறும் நாளை தற்போது வழங்கப்பட்டுள்ள தேர்வு கால அட்டவணையின்படி சிவப்பு மையினால் திருத்தம் செய்ய வேண்டும். **இப்பொருள் குறித்து சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

ஒம்/–

**இணை இயக்குநர் (மேல்நிலை)**